செய்தி வெளியீடு எண்:402 நாள் : 13.08.2015

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீர்மிகு திட்டங்களின் ஒன்றான மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம் குறித்து மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் தலைமையில், மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்கும் நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர்கள், தர நிர்ணய அலுவலர்கள், சோதனை கூட தொழில்நுட்ப அலுவலர்கள் (LAB TECHNICIANS) ஆகியோருடனான கூட்டம் 12–8–2015 அன்று சென்னையில் நடைபெற்றது.**

**-----**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீர்மிகு திட்டங்களின் ஒன்றான மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம் குறித்து, மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் தலைமையில், மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்கும் நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர்கள், தர நிர்ணய அலுவலர்கள், சோதனைக்கூட தொழில்நுட்ப அலுவலர்கள் (Lab Technicians) ஆகியோருடனான கூட்டம் 12.8.2015 அன்று சென்னையில் நடைபெற்றது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், 30.6.2011 அன்றைய நாளில் அரிசி பெறத் தகுதியுள்ள குடும்ப அட்டை வைத்துள்ள 1.85 கோடி குடும்பங்களில் உள்ள மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டார்கள்.

அதன்படி, நான்கு கட்டங்களில், இதுவரை, 1 கோடியே 35 லட்சத்திற்கும் மேலான மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட இத்திட்டத்திற்கு கடந்த நான்கு கட்டங்களாக மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்களை வழங்கிவந்த நீங்கள், ஐந்தாவது கட்டத்திற்கான தேவையை அறிந்து உரிய நேரத்தில், உரிய தரத்துடன் எவ்வித குறைபாடுகளும் காலதாமதமும் இன்றி மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்களை மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

மேலும் இத்திட்டத்திற்காக மாவட்ட அளவில் பெறப்படும் பொருட்களின் தரங்களை சோதனை செய்தல், பொருட்களை கிடங்குகளில் வைக்க பாதுகாப்பாக எடுத்துச் செல்லுதல், பயனாளிகளுக்கு வழங்குவதற்கு முன் சோதனை செய்தல், மாவட்டங்களில் பயனாளிகளுக்கு விநியோகம் செய்தல் போன்ற பணிகளிலும், தரத்தினை உறுதிசெய்யும் பொருட்டும் நீங்கள் செயலாற்றிட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மாவட்டங்களுக்கு அனுப்பப்படும் பொருட்களை உரிய சோதனைக்குப் பின் உடனடியாக பயனாளிகளுக்கு வழங்க வேண்டும் என்றும் பயனாளிகளுக்கு வழங்குவதில் எவ்வித காலதாமதம் செய்யக் கூடாது என்றும் துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அனைத்து மாவட்டங்களிலும், மகளிருக்கு வழங்கப்படும் விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர்கள் போன்றவற்றில் ஏற்படும் குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்யும்பொருட்டு, மாவட்டங்களில் சேவை மையங்களை தேவையான அளவில், பணியாளர்கள், உபரிபாகங்கள் ஆகியவை இருக்கும் வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

மேலும், மாவட்டங்களில் உள்ள சேவை மையங்களின் செயல்பாடுகளை மாவட்ட மற்றும் மாநில அளவில் உள்ள அலுவலர்களால் அவ்வப்போது கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

நிறைவாக, விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், ஐந்தாவது கட்டமாக, வழங்கப்படவுள்ள 45 லட்சம் எண்ணிக்கையின் முழு இலக்கினையும் இவ்வாண்டு இறுதிக்குள் முடிக்க நீங்கள் விரைந்து செயலாற்றி உங்களது முழு ஒத்துழைப்பை தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் கேட்டுக் கொண்டார். இக்கூட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் திரு கா.பாலச்சந்திரன், இ.ஆ.ப. அவர்கள், நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர்கள், தர நிர்ணய அலுவலர்கள், சோதனைக்கூட தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**